பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kālaikkathir மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 17 செவ்வாய்க்கிழமை 30.03.2021 கதிர் 13

புதிய பிரிவு A/L 2023
கணக்கீடு
திரு. க. பா. பாலகஜன்
M.Com (Hons), B.Com (Jaf.),H.N.Dip.-in. ACC.,Dip.-in-Edu.
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
கொழும்புத்துறை - சனி, ஞாயிறு 2.15 p.m - 3.30 p.m
கந்தர்மடம் - சனி, ஞாயிறு 7.00 a.m - 8.00 a.m
Zoom class - திங்கள்,வெள்ளி 7.30 p.m - 8.30 p.m
A/L 2021 & DAY, A/L 2022 வகுப்புகளும் நடைபெறு கின்றன.
புதிய அனுமதிகளுக்கு அழையுங்கள்.
077 216 8884

# இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை



## அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு

இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவ=ர்களுக்கு அனுமதியளிக்க அரசு எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை.

– இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடலில் மீன்பிடிக்க அனுமதிப் பத்திரத்தை வழங்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார் என்று ஊடகங்களில் வெளியான தகவல்கள் குறித்து, இன்று நடைபெற்ற அமைச்சரவைத்தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கருத்துக் கூறும்போதே அமைச்சர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

2

# இம்முறை முதல்வர் பதவிக்கு வாய்ப்புக் கிட்டினால் விடேன்!

## மாவை சேனாதிராஜா திட்டவட்டம்



**அம்பாறை,மார்ச்30**

**கடந்தமுறை வடக்கு முதலமைச்சராக வரும் சந்தர்ப்பம் எனக்கு நூறு வீதமிருந்தபோதும், அதை விக்னேஸ்வரனுக்கு விட்டுக் கொடுத்தேன். இந்தமுறை அப்படியான சந்தர்ப்பம் இருக்கின்றதா என்று எனக்குத் தெரியாது. ஆனால், இம்முறை சந்தர்ப்பம் வந்தால் அதைப் பொறுப்பேற்க வருவேன். மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அது தொடர்பில் நாங்கள் புதிய அணுகுமுறைகளைப்பின்பற்றி தேர்தலுக்கு முகங்கொடுப்போம்.**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்தார்.**

2

# மாகாணத் தேர்தல் வேண்டாம்; பௌத்த தேரர்கள் போர்க்கொடி



## ஜனாதிபதிக்கும் கடிதம்

மாகாண சபைத் தேர்தலுக்கு எதிராகப் பௌத்த தேரர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இலங்கையில் தற்போதிருக்கும் சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் எனத் தெரிவித்து முக்கிய பௌத்த தேரர்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

2

# கலப்பு முறையில் மாகாணத் தேர்தல்

## அரசு யோசனை

மாகாண சபைத் தேர்தலை தொகுதிவாரி மற்றும் விகிதாசார முறைகள் இணைந்த கலப்பு முறையில் நடத்துவதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது.

– இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இதன்படி மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக கட்சித் தலைவர்களைக் கூட்டி இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

2

# பிரிவினைவாதத்துக்குத் தூபமிடும் சகலருக்கும் இலங்கை கதவடைப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கைகளைப் பின்பற்றும் மற்றும் பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் சகலரையும் இலங்கை அரசு தடை செய்யும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

7 புலம்பெயர் அமைப்புகளுக்கும், 388 நபர்களுக்கும் இலங்கை அரசு தடை விதித்துள்ளமை குறித்து இன்று நடைபெற்ற அமைச்சரவைத்

2

# புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும்

## உலகத் தமிழர் பேரவை அதிருப்தி

புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் இலங்கையின் தடைசெய்யப்பட்ட பட்டியலில் இணைக்கப்பட்டமைக்கு உலகத் தமிழர் பேரவை அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கைக்கு எவ்வித சட்ட, அரசியல் அல்லது தார்மீக அடிப்படையும் இல்லை என்றும், ஐ.நா. விதிமுறைகளை மீறும் செயலாகும் என்றும் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன்

2

# 96 பேருக்கு யாழில் தொற்று

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெறப்பட்ட 1,440 பி.சி.ஆர். மாதிரிகளில் 4 இடங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தியதின் பேறுகளின் அடிப்படையில் 96 பேருக்கு கொரோனா தொற்று இருப்பதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் நகர வர்த்தகர்களிடம் நேற்று முன்தினம் பெறப்பட்ட 870

2

# சர்வதேச நீதிமன்றத்தில் இராணுவத்தை ஒருபோதும் முன்னிலைப்படுத்த முடியாது



## கோட்டா அரசு திட்டவட்டம்

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடிப்படையாகக்கொண்டு இலங்கை படையினரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் முன்னிலையில் ஒருபோதும் கொண்டு செல்ல முடியாது. பாதுகாப்புச் சபை ஊடாக முயற்சி எடுக்கப்பட்டால்கூட அதனை சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி தடுத்து நிறுத்தும்.

2

# குற்றவாளிகளிடம் நீதியை எப்படி எதிர்பார்க்க முடியும்?

## காணாமல்போனோரின் உறவுகள் கேள்வி



**(வவுனியா நிருபர்)**

இலங்கையிடம் நீதியை வழங்கும் பொறிமுறையை சர்வதேசம் வழங்கியிருப்பது மிகவும் வேதனையான விடயம் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இம்முறை முதல்வர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாறை மாவட்டத்தில் நேற்றிரவு தமிழரசுக் கட்சியின் கல்முனைத் தொகுதி செயற்பாட்டாளர்களைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளடங்கிய ஓர் அரசமைப்பு ஏற்பட வேண்டும் என்ற அடிப்படையில் அரசு வரைவை முன்வைத்தால் மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவ்வாறாக அரசுடன் ஒரு பேச்சுக்குச் செல்ல வேண்டும் என எமது அங்கத்தவர்களாலும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

அதற்கான ஒரு சூழ்நிலை எழ வேண்டும். அரசு அதற்கு அழைப்பு விடுக்க வேண்டும். அரசு அதற்குத் தகுந்ததாக இருந்து அரசமைப்பை உருவாக்குவதற்கு ஆயத்தமாக இருந்தால் அதனை அடிப்படையாகக் கொண்டு நாங்களும் பேச்சு நடத்துவோம். அதற்கான வரைவுகளும் ஏற்கனவே எம்மால் வழங்கப்பட்டிருக்கின்றன.

இலங்கை மீதான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானம் முன்னரை விட பல படிகளில் முன்னேற்றகரமாக இருக்கின்றது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் விசாரணைப் பொறிமுறைக்குள் தள்ளுவது இலகுவான விடயம் அல்ல. ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மிகத் தெளிவாக இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு போக வேண்டும் என்று கருத்துப்பட அறிக்கையிட்டுள்ளார். அதைப் பிரதிபலிக்கக்கூடிய பல விதிமுறைகளும் ஐ.நாவின் புதிய தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

தற்போது இந்த அரசு எதற்காக தங்கள் இராணுவத்துக்குத் தண்டனைகள் விதிக்கப்படாமல் பாதுகாப்பதற்கென்று ஓர் அரசியல் சட்டத்தைக் கொண்டு வருவதற்குத் தீர்மானிக்க வேண்டும்? ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்படி ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்கள் என்பவற்றை ஒட்டித்தான் இந்த அரசு மேற்சொன்ன சட்ட விடயத்தைப் பற்றிப் பேசுகின்றது என்று எண்ணுகின்றோம். இவ்வாறெல்லாம் புதிய தீர்மானம் மிக வலுவானதாக இருக்கின்றது.

சர்வதேச மன்னிப்புச் சபையினர், தயான் ஜயதிலக போன்ற நடுநிலைவாதிகள், சர்வதேசத்தின் பல நாடுகள் போன்றவை இந்தத் தீர்மானம் முன்னரை விட கடுமையானதாக இருக்கின்றது எனவும், அரசுக்குப் பல நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடியது எனவும் வர்ணித்திருக்கின்றார்கள்.

இதை விட நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்குவது மட்டுமல்ல, முதன் முறையாக இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற விடயமும் புதிய தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த நாட்டில் தமிழர்களுக்கான தமிழ்த் தேசத்தின் தமிழ் இன விடுதலைக்கான அரசியல் தீர்வு நிச்சயம் ஏற்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய கட்சிகள் அனைத்தும் சர்வதேசத்தின் ஏனைய சக்திகள் அனைத்தும் ஒரு கட்டமைப்பாகச் செயற்பட வேண்டும்.

நாங்களும் தேர்தலைத் தாண்டி இந்த இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதாக ஒரு சிறந்த கட்டமைப்பை எதிர்காலத்தில் சர்வதேச ரீதியாக உருவாக்க வேண்டும். நாங்கள் ஏற்கனவே பல தீர்மானங்களை மேற்கொண்டிருக்கின்றோம். சர்வதேச ரீதியிலும் அவ்வாறான கட்டமைப்பு உருவாக வேண்டும்.

நாங்கள் வெறுமனே தேர்தலை மையமாகக் கொண்ட ஒரு கூட்டு அல்ல, எங்களுக்கு ஒரு சிறந்த பலம் வாய்ந்த கட்டமைப்பு புலம்பெயர் ரீதியிலும், இங்கும் உருவாக வேண்டும். அது பல நாடுகளின் நிபுணத்துவம் வாய்ந்தவர்களால் இன்று உச்சரிக்கப்பட்டிருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையாரும் சர்வதேச ரீதியில் எமது இனப்பிரச்சினை தொடர்பில் ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று அறிவித்திருக்கின்றார். அது எமக்கு மிகவும் உற்சாகமாக இருக்கின்றது.

நாம் எதிர்பார்த்த முழுவதும் அப்படியே இங்கே கிடைக்காது விட்டாலும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னேற்றங்கள் தொடர்பில் நாங்கள் ஆர்வம் கொண்டு பொறுத்திருந்து அந்த நடைமுறைகளுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட வேண்டும்.

மகாகாண சபைத் தேர்தல் தொடர்பிலும் ஐ.நாவின் புதிய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தியா போன்ற நாடுகளும் அது தொடர்பில் பேசியிருக்கின்றன. இந்தியா நடுநிலைமை வகித்தாலும் மிக ஆக்கபூர்வமான பணிகளை அந்தத் தீர்மானத்தின் ஊடாக எடுத்திருக்கின்றது. அந்தப் பொறுப்பையும் நாங்கள் உணருகின்றோம். அவர்கள் மிகவும் தந்திரோபாயமாக அந்தத் தீர்மானத்தில் நடுநிலை வகித்திருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் சிறந்த முறையில் எமது மக்களின் விடுதலைக்காக சர்வதேசத்தில் வேலை செய்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடைபெற வேண்டும் என்று பல நாடுகளும் வற்புறுத்தியிருக்கின்றன.

அவ்வாறு நடைபெறாது விட்டாலும் அந்தப் பல நாடுகளும் இந்த அரசுக்கு எதிராகத்தான் செயற்பட வேண்டும். மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அது தொடர்பில் நாங்கள் புதிய அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டி இருக்கும். அதனூடாக அதனை நாங்கள் முகங்கொடுப்போம்.

ஆளுங்கட்சிகள் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளைக் கைப்பற்ற வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் நாங்களும் எவ்வளவு தூரத்துக்கு மிகப் பெரிய அளவில் ஒன்றுபட்டு செயற்பட முடியும், தேர்தல் வெற்றியைப் பெற முடியும் என்பது பற்றி ஆராய்வோம்.

கடந்த முறை வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நான் போட்டியிடும் நிலைமையிருந்தது. எனினும், நான் போட்டியிடவில்லை. நான் போராட்ட வழிமுறைகளையே பின்பற்றுகிறேன் எனக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் விளக்கமளித்தேன். விக்னேஸ்வரனைக் கொண்டு வருவதில் நான் முக்கிய பங்காற்றினேன்.

அந்த மாகாண சபை சிறப்பானதாகத்தான் இருந்தது. இருந்தாலும், அது முறையாகச் செயற்படவில்லையென்ற விமர்சனம், எமது கட்சியின் பின்னடைவுக்கு ஒரு காரணமாக அமைந்தது.

அப்போது நான் முதலமைச்சராக வர வேண்டுமென்ற சந்தர்ப்பம் நூறு வீதமாக இருந்தது. இப்போது அப்படியான சந்தர்ப்பம் இருக்கின்றதோ தெரியாது. மாகாண சபை நடைமுறையில் இருக்குமா, தேர்தல் வருமா என்பதெல்லாம் தெரியாது. ஆனால், இம்முறை அப்படியொரு சந்தர்ப்பம் வந்தால், நான் பொறுப்புக்கு வருவேன் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன் – என்றார்.

## இந்திய மீனவர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயத்தில் அமைச்சரால் தனியாகத் தீர்மானம் எடுக்க முடியாது. அமைச்சரவையில் கலந்துரையாடி தீர்மானிக்க வேண்டும். ஆனால், இதுவரையில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவ்வாறான யோசனையை அமைச்சரவையில் சமர்பிக்கவில்லை.

இதனால் அரசு என்ற ரீதியில் இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடலில் மீன்பிடிக்க எந்த வகையிலும் அனுமதி வழங்கப்படவில்லை.

இதேவேளை, இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் விடுதலை தொடர்பாக அரசு கலந்துரையாடி வருகின்றது. இது தொடர்பில் விரைவில் இந்தியாவிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் – என்றார்.

## குற்றவாளிகளிடம்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:–

எமது உறவுகளின் உண்மைநிலையை வலியுறுத்தி மூன்று வருடங்களுக்கும் மேலாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எனினும், எமக்கான நீதியை எந்தவொரு அரசும் வழங்கவில்லை. எமது உறவுகளைத் தருமாறே நாம் போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். நாம் வேறு எதையும் இந்த அரசிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை.

எமக்கான நீதி ஒன்று கிடைக்கும் வரையில் நாம் இந்தப் போராட்டங்களை இடைநிறுத்தாமல் தொடர்ந்து முன்னெடுப்போம். சர்வதேச நீதியை நம்பியே நாம் போராடி வருகின்றோம். எனினும், ஜெனிவா தீர்மானத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி தொடர்பாக எந்தப் பலன்களும் கிடைக்கவில்லை. நாங்கள் இழப்பீட்டுக்கான அலுவலகத்தையோ, காணாமல்போன அலுவலகத்தையோ கோரி போராட்டம் நடாத்தவில்லை.

குற்றம்செய்த குற்றவாளிகளிடம் நீதி கிடைக்கும் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? அந்தவகையில் இலங்கையிடம் நீதியை வழங்கும் பொறிமுறையை சர்வதேசம் வழங்கியிருப்பது மிகவும் வேதனையான விடயமாகவே இருக்கின்றது. எனவே, எமது துன்பங்களைத் தீர்த்துவைப்பதற்கான சர்வதேச நீதியை எதிர் பார்த்து நாம் காத்திருக்கின்றோம் – என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், எங்கே எங்கே உறவுகள் எங்கே?, தமிழ்க் குழந்தைகளும் பயங்கரவாதிகளா?, பாடசாலை சென்ற மாணவர்கள் எங்கே?, அரசின் பொறுப்பற்ற பதில்களைக் கண்டிக்கின்றோம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

## புலம்பெயர் அமைப்புகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

தாம் தமிழர்களின் அரசியல் உரிமைகளை மேம்படுத்துவதிலும், இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் புனர்வாழ்வு, நிவாரண முயற்சிகளிலும் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை அரசின் இந்தத் தடை, நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகத் தமிழர் பேரவை, இலங்கையின் தெற்குப் பகுதியில் உள்ள அரச சார்பற்ற அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டு வந்தது எனவும் சுரேன் சுரேந்திரன் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

## பிரிவினைவாதத்துக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது. அதேபோன்று அரசியலமைப்பின் கீழ் பிரிவினைவாதமும் தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் அவ்வாறான கொள்கைகளை உடையவர்களுடன் இலங்கை அரசு தொடர்புகளைப் பேண வேண்டிய அவசியம் கிடையாது.

இதனால் இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொள்கைகளைப் பின்பற்றும் மற்றும் பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் குழுக்கள் மற்றும் நபர்களை அரசு தடை செய்யும் – என்றார்.

## கலப்பு முறையில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனிடையே, தற்காலத்தில் தேர்தல் ஒன்று நடக்குமானால் அரசு தோல்வியடைவது நிச்சயம் என ஆனந்த தேரர் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாகாணத் தேர்தல்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முருத்தெட்டுவே ஆனந்த தேரர், கசப்ப தேரர், விமலஜோதி தேரர் உட்படப் பல தேரர்களின் கையொப்பத்துடன் இந்தக் கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச நீதிமன்றத்தில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரும் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் மக்கள் மத்தியில் மாயையொன்றை உருவாக்கி அச்சத்தை ஏற்படுத்துவதற்கு எதிரணி முயற்சிக்கின்றது. இது தொடர்பில் எவரும் அச்சப்படவேண்டியதில்லை. அத்துடன், எமது நாட்டு முப்படையினரையும், அரசியல் தலைவர்களையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்வதற்கான சூழல் குறித்த தீர்மானத்தின் ஊடாக உருவாகியுள்ளது எனவும் குறிப்பிடுகின்றனர். இது தவறான கருத்தாகும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்வதற்கு இரு வழிகள் உள்ளன. இதில் ஒன்றுதான் ரோம் உடன்படிக்கை. அந்த உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடவில்லை. அடுத்ததாக ஐ.நா. பாதுகாப்புசபை கட்டளையிட்டால் சர்வதேச நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும். இதன்படி யோசனையொன்று முன்வைக்கப்பட்டால்கூட சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனை நிராகரிக்கும். எனவே, இலங்கை படையினரையோ, அரசியல் தலைவர்களையோ சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லமுடியாது.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபை என்பது கலந்துரையாடல் களமாகும். அங்கு தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் மனித உரிமைகள் பேரவைக்கு கிடையாது. அதற்கான அதிகாரம் பாதுகாப்புச் சபைக்கு மட்டுமே இருக்கின்றது – என்றார்.

## யாழ்ப்பாணத்தில் மேலும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதிரிகளில் முல்லேரியா வைத்தியசாலையில் 551 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் 67 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது தெரியவந்தது.

இதேபோன்று கொழும்பு ஜெயவர்த்தன பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் 219 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டன. அதில் 23 பேருக்குத் தொற்று இருப்பது தெரியவந்துள்ளது.

இதேசமயம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று சேகரிக்கப்பட்ட 136 மாதிரிகள் உட்பட 200 இற்கும் அதிகமான மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 9 பேருக்கு உறுதி செய்யப்பட்ட நிலையில் அவர்களில் 6 பேர் யாழ்ப்பாணம் வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இடம்பெற்ற பரிசோதனைகளிலேயே 106 பேருக்கு கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதேநேரம் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பெறப்பட்ட மாதிரிகள் உள்ளிட்டவை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பரிசோதனை இடம்பெறுவதோடு இவற்றின் பெறுபேறுகள் இன்று இரவு வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மாகாணத் தேர்தலுக்கு அச்சம்

'பானையை பார்த்து சட்டி கறுப்பு எண்டதாம்!' என்பார்கள். பானை தானே கருங்கட்டையாய் இருந்து கொண்டு சட்டியைப் பார்த்து கறுப்பு என்று விமர்சிக்க முற்பட்டதாம் என்பதுதான் இதன் விளக்கம்.

நாட்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து, மக்கள் தமது வாக்குரிமையைப் பிரயோகிக்க அனுமதி மறுத்தது முன்னைய நல்லாட்சி அரசு என்று இப்போதைய கோட்டாபய ஆட்சித் தரப்பு கூறுவதைக் கேட்கும்போது இந்த சட்டி, பானை விமர்சனக் கதைதான் நினைவுக்கு வருகின்றது.

மாகாண சபைத் தேர்தல்களில் வாக்களிப்பதும் மக்கள் தமது இறைமையைப் பிரயோகிக்கும் ஒரு வழி முறை என்று நாட்டின் உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பு ஒன்றில் தெரிவித்திருக்கின்றது.

மக்களின் அந்த இறைமையைப் பிரயோகிக்கும் தத்துவத்திற்குத்தான் தென்னிலங்கை ஆட்சிப் பீடங்கள் தடை போட்டு வருகின்றன. மாறி மாறி முட்டுக்கட்டை போட்டு காலத்தை இழுத்தடிக்கின்றன. அதற்கான குற்றச்சாட்டு விரலை ஒருவர் மீது மற்றவர் மாறி மாறி நீட்டி, சுமத்துகின்றன.

'இறைமை' குறித்து அதிகம் பேசும் தென்னிலங்கைத் தரப்புகளே மக்கள் தமது இறைமையைப் பிரயோகிக்கும் விடயத்தில் குறுக்கே நின்று குழப்பி வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை வைத்திருந்த நல்லாட்சி அரசுக்கோ –

அல்லது இப்போது ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்கும் கோட்டாபய அரசுக்கோ –

மாகாண சபைத் தேர்தலை நடத்தும் எண்ணம் இருந்தால் அதை முன்னெடுப்பது ஜுஜுபி வேலை. மிகச் சிறிய – அற்ப – காரியம்.

ஆனால், அப்போதிருந்த நல்லாட்சி அரசுக்கோ அல்லது இப்போது அதிகாரத்தில் இருக்கும் கோட்டாபய அரசுக்கோ அத்தகைய தேர்தலை எதிர்கொள்ளும் திராணியும் இல்லை; விருப்பமும் இல்லை; கொள்கை ரீதியாக உடன்பாடும் இல்லை.

அதனால் தினசரி ஒரு சாக்குப் போக்குச் சொல்லி, புதிது புதிதாக காரணங்களை முன்னிறுத்தி, முட்டுக்கட்டைகளைத் தேடிப் பிடித்துப் போட்டு, தேர்தலைத் தள்ளி வைப்பதற்கான வாய்ப்புக்களை ஆட்சித் தரப்பே உருவாக்கி வருவது கண்கூடு.

மாகாண சபைத் தேர்தலை எப்படி நடத்துவது என்பதற்கான சட்டம் இப்போது இல்லை. இருந்த சட்டங்களை, புதிய நாடாளுமன்றச் சட்டங்கள் மூலம் இல்லாதொழித்த நல்லாட்சி அரசு அடுத்த ஓராண்டுக்குள் உரிய சட்டம் உரிய முறையில் கொண்டு வரப்படும் என உறுதியளித்தது.

அதன் பின்னர் சுமார் இரண்டரை ஆண்டுகள் பதவியில் இருந்த முன்னைய நல்லாட்சி அரசு அக்கால கட்டத்தில் அதற்குரிய சட்டங்களைக் கொண்டு வரவேயில்லை.

எத்தகைய முறைமையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது என்ற கொள்கை விவகாரத்தில் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இடையே இணக்கம் ஏற்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி, அந்தத் தேர்தலை நடத்த வாய்ப்பு ஏற்படுத்தாமல், காலத்தை இழுத்தடித்தது நல்லாட்சி அரசு.

அதே தந்திரோபாயத்தை இப்போது கையிலெடுக்கத் தயாராகி விட்டது கோட்டாபய அரசும்.

புதிய முறைமை ஒன்றைக் கண்டுபிடித்து அதற்கு இணங்குவதில் சிக்கல் இருந்தால், பழைய முறையில் அப்படியே தேர்தலை நடத்துவதற்கான தீர்மானம் எடுத்து அதை நடைமுறைப் படுத்துங்கள், அப்படிச் செயற்பட்டால் மூன்று மாதங்களுக்குள் தேர்தலை நடத்த முடியும் என்று இன்றைய ஆட்சியாளர்கள், முன்பு எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது நல்லாட்சித் தரப்பினரிடம் தெரிவித்தனர்.

இதே கருத்தை முன்பு நல்லாட்சி அரசில் அதிகாரத்தில் இருந்தோர், இப்போது எதிரணியில் இருந்து கொண்டு, ராஜபக்ஷ அரசுத் தரப்புக்குக் கூறுகின்றனர்.

ஆனால், இரண்டு தரப்புகளுமே தாங்கள் அதிகாரத்தில் இருந்த போதும், இப்போது இருக்கின்றபோதும், அதைச்செய்யத் தயாரில்லை என்பதுதான் விசனத்துக்குரிய உண்மையாகும்.

பழைய முறைமையில் தேர்தலை நடத்தும் கொள்கைத் தீர்மானத்தை இன்று எடுத்தால் அடுத்த மூன்று மாதங்களுக்குள் எல்லா மாகாணங்களிலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகங்கள் அதிகாரத்தில் இருக்கும்.

இப்போதைய அரசும் அதைச் செய்யப் போவதில்லை என்பது தெளிவாகி விட்டது.

மாகாண சபைத் தேர்தலை முறைமை குறித்துத் தீர்மானிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற பீடிகையோடு அது இப்போது ஆரம்பித்திருக்கும் அரசியல் நாடகத்தின் நிகழ்ச்சி நிரல் திட்டப்படி, இனிமேல் மாகாண சபைத் தேர்தல்கள் அரங்கேறக் குறைந்தது இரண்டு வருடங்களாவது செல்லும் என்பது உறுதி.

அதுவரை விடயம் இழுபடப் போகின்றது. இந்தப் பின்புலத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நல்லாட்சி அரசே அஞ்சியது என்று பொதுஜன பெரமுனவினர் விமர்சிப்பது சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்ற கதை போன்றதுதான்...!

# நிறைவேற்றதிகாரத்தை நீக்கி நாடாளுமன்றை மையமாகக் கொண்டுள்ள ஆளும் கட்டமைப்பு

## ஜே.வி.பி. முன்மொழிவு



புதிய அரசமைப்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி, நாடாளுமன்றத்தை மையமாகக் கொண்ட ஆளும் கட்டமைப்பை உருவாக்குவதற்கு மக்கள் விடுதலை முன்னணி முன்மொழிந்துள்ளது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவிடம் இந்தப் பரிந்துரைகளை சமர்ப்பித்த தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதனை தெரிவித்தார்.

மேலும் கடந்த காலங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையால் எவ்வித பயனும் ஏற்படவில்லை என்றும் எனவே மக்களின் உண்மையான ஆணையை பிரதிபலிக்க பொருத்தமான தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அதேவேளை சர்வதேச நாடுகளுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதற்கு முன்பு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுவது புதிய அரசமைப்பில் கட்டாயமாக்க வேண்டும் என்றும் கூறினார்.

புதிய அரசமைப்பை அமுல்படுத்துவதன் மூலம் நாடாளுமன்றத்தின் நிதி அதிகாரங்களை வலுப்படுத்தவும் கருவூலத்தில் இருந்து நிதியை விடுவிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுவது கட்டாயமாக்கும் ஒரு விதியைச் சேர்க்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# ஆனையிறவில் விபத்து; நால்வர் படுகாயமடைவு!




ஆனையிறவுபகுதியில் இடம்பெற்ற விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

வான் ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டமையாலேயே நேற்று (திங்கட்கிழமை) இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பெற்றோரும், இரண்டு சிறுவர்களுமே இவ்வாறு காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பிரசாந்தனின் விளக்கமறியல் 12 ஆம் திகதி வரை நீடிப்பு



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தனை மேலும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.ரிஸ்வான் உத்தரவிட்டுள்ளார் .

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பூ.பிரசாந்தன் மீதான வழக்கு விசாரனை நேற்ற திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்ட போது கொரோனா அச்சம் காரணமாக அவரை நீதிமன்றத்துக்கு அழைத்துவரமுடியாதென சிறைச்சாலை சார்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதனைக் கருத்திற்கொண்ட நீதிமன்றம் மேலும் 14 நாள்களுக்கு, எதிர்வரும் 12.04.2021 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆரையம்பதியில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அவர், ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய பூ.பிரசாந்தன் மீண்டும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அஸாத் ஸாலியை பழிவாங்காது உடனே விடுதலை செய்யுங்கள்

## ரிஷாத் கோரிக்கை



குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலியை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு, மட்டக்குளியில் இடம்பெற்ற மக்கள் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட இளைஞர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இந்த பகிரங்க வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

அஸாத் ஸாலியை விசாரணை செய்து, அவர் தவறிழைக்காவிட்டால் உடனடியாக விடுதலை செய்யுங்கள். சமூகத்துக்காகக் கருத்துத் தெரிவித்தார் என்பதற்காக, அவரின் குரல்வளையை நசுக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம்.

அவரை தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்திருப்பது தருமமும் நீதியும் அல்ல. சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகளுக்காக ஓயாது குரல் கொடுத்தவர். குறிப்பாக, ஜனாஸா அடக்கும் முயற்சிகளுக்கும் அவர் எங்களுடன் இணைந்து போராடினார்.

அவர் ஓர் அரசியல் கட்சியின் தலைவர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மற்றும் முன்னாள் ஆளுநரும் கூட. எனவே அவரை அநியாயமாக பழிவாங்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு


# தமிழகத்தின் 20 மாவட்டங்களில் வெப்பநிலை உயரும்.– வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

தமிழகத்தின் 20 மாவட்டங்களில் இயல்பைவிட வெப்பநிலை உயரும் என வானிலை ஆய்வு நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் கூறுகையில், 'தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் போன்ற இடங்களில் இன்று முதல் ஏப்ரல் 2 ஆம் திகதிவரை வறண்ட வானிலையே நிலவும். சென்னையைப் பொறுத்தவரை இன்று வானம் பொதுவாக தெளிவாகக் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 35 பாகை செல்சியஸாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 பாகை செல்சியஸாகவும் பதிவாகும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை டெல்லியில் கடந்த 76 ஆண்டுகளில் இல்லாதவகையில் நேற்று முன்தினம் அதிகபட்ச வெப்பநிலையாக 40.1 பாகை செல்சியஸ் பதிவாகியதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அங்கே அனல் காற்று வீசுவதால் பொது மக்கள் அவதானத்துடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் பெண்களுக்கு தனி நீதிமன்றம்

## தி.மு.க பிரசாரத்தில் கனிமொழி வாக்குறுதி




மகளிருக்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்ய ஒவ்வொரு மாவட்டங்களிலும் தனி நீதிமன்றம் அமைக்கப்படும் என நாடாளுமன்ற தி.மு.க. துணைத் தலைவர் கனிமொழி தெரிவித்துள்ளார்.

விருகம்பாக்கத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து அங்கு பேசிய அவர், அ.தி.மு.க. ஆட்சியில் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது பெண்கள் தான். அவர்களின் ஆட்சியில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுபவர்களில் 15 சதவீதமானவர்கள் கூட தண்டிக்கப்படுவது கிடையாது. தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் பெண்களுக்கு என தனிநீதிமன்றம் அமைக்கப்படும்.

குடியுரிமை திருத்தச் சட்டம் சிறுப்பான்மை மக்களுக்கு எதிரானது. இந்தச் சட்டத்திற்கு ஆதரவாக அ.தி.மு.க. வாக்களித்தது. ஆனால், இப்போது இந்தச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு அழுத்தம் கொடுப்போம் எனப் பேசுகிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

# தமிழகத்தில் தி.மு.க.வை எதிர்த்து பா.ஜ.க.தான் போட்டியிடுகிறது

## பிரசாரக் கூட்டத்தில் தொல்.திருமாவளவன் பேச்சு



தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பில் நாகை சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் ஜெ. முகமது ஷாநவாஸை ஆதரித்து, நாகையில் நேற்றிரவு தொல். திருமாவளன் பிரசாரம் மேற்கொண்டார்.

அங்கே அவர் உரையாற்றியபோது, தற்போது நடைபெறவுள்ளது நெருக்கடி மற்றும் சவால்கள் நிறைந்த தேர்தல். அ.தி.மு.க, பா.ம.க. சார்பில் தேர்தலில் களம் காணும் வேட்பாளர்கள் அக்கட்சியைச் சேர்ந்த வேட்பாளாகள் இல்லை. தாமரை, இரட்டை இலை, மாம்பழம் என்ற 3 சின்னங்களில் பா.ஜ.க.தான் போட்டியிடுகிறது. தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளிலும் தி.மு.கவை எதிர்த்து அ.தி.மு.க. போட்டியிடவில்லை – பா.ஜ.க.தான் போட்டியிடுகிறது. பா.ஜ.க. வெற்றி பெற்றால் தமிழகத்தில் மத நல்லிணக்கம் முற்றிலுமாக சிதைக்கப்படும்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எந்த நிபந்தனையும் இல்லாமல் 2014 முதல் தி.மு.க. கூட்டணியில் இருந்து வருகிறது. தி.மு.க. முன்னெடுத்த அனைத்துப் போராட்டங்களிலும் அவாகளுடன் இணைந்து நாம் செயல்பட்டுள்ளோம். பேரவைத் தொகுதிப் பங்கீட்டின்போது விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 6 தொகுதிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டது. அதனை முழுமனதோடு ஏற்றுக்கொண்டோம். 6 பேரும் ஆறு படை வீரர்கள். 6 பேரும் வரலாறு படைப்பார்கள். நாகை தொகுதியில் போட்டியிடும் ஜெ.முகமது ஷாநவாஸ் மிகுந்த கொள்கைப் பிடிப்பு உடையவர். சுயநலமின்றி செயல்படக்கூடியவர். நாகையிலேயே தங்கி மக்களுக்கு சேவையாற்றவும் தயாராக உள்ளார். நாகை சட்டப்பேரவைத் தொகுதியில் இவர் பெறும் வெற்றி தி.மு.க. தலைவர் பெறும் வெற்றி. அவரை முதல்வராக்கக் கூடிய வெற்றி என்று குறிப்பிட்டார்.

# மாநில அரசின் அரிசி விநியோகத் திட்டத்துக்கு அனுமதி

## கேரள உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவு

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள கேரள மாநிலத்தில் முன்னுரிமை அல்லாத குடும்ப அட்டைதாரர்களுக்கு மாநில அரசின் அரிசி விநியோகத் திட்டத்துக்கு அனுமதி அளித்து கேரள உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. மாநில தேர்தல் ஆணைய தடை உத்தரவை எதிர்த்து மாநில அரசு சார்பில் தொடரப்பட்ட வழக்கில் இந்த உத்தரவை உயாநீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

கேரள மாநிலத்தில் பல்வேறு பண்டிகைகளை முன்னிட்டு முன்னுரிமை அல்லாத நீல நிற மற்றும் வெள்ளை நிற குடும்ப அட்டைகளுக்கு மானிய விலை அரிசி விநியோகம் மற்றும் உணவுப் பொருள் தொகுப்பு வழங்கும் இடதுசாரி ஜனநாயக முன்னணி அரசின் திட்டத்துக்கு எதிராக காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி சார்பில் தேர்தல் ஆணையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது. 'சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டே இந்தத் திட்டத்தை மாநில அரசு அறிவித்துள்ளது. இது தேர்தல் நடத்தை விதிமுறை மீறலாகும்' என்று அந்தப் புகாரில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புகாரின் அடிப்படையில், மாநில அரசின் அரிசி விநியோகத் திட்டத்தை நிறுத்திவைக்க மாநில தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. இதை எதிர்த்து கேரள உயாநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு வந்த போது, மாநில அரசு சார்பில் ஆஜரான வழக்குரைஞர், 'ஈஸ்டர், விஷு, ரமலான் போன்ற பண்டிகைகள மனதில் கொண்டே முன்னுரிமை அல்லாத குடும்ப அட்டைதாரர்களுக்கும் மானிய விலை அரிசி வழங்க மாநில அரசு முடிவுசெய்தது. மேலும், இந்த திட்டம் மாநில சட்டப்பேரவையில் கடந்த ஜனவரியில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு, அதற்கான உத்தரவை கடந்த பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதியே மாநில அரசு பிறப்பித்துவிட்டது. எனவே, இதை மாநில அரசின் தன்னிச்சையான முடிவாக கருத முடியாது' என்று கூறினார்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், மாநில அரசின் அரிசி விநியோக திட்டத்துக்கு அனுமதி அளித்து உத்தரவிட்டது. அதே நேரம், அரிசி விநியோகத் திட்டத்தில் ஆளும் கட்சிக்கு சாதகமாக வாக்காளர்களை ஈர்க்கும் வகையிலான எந்தவொரு நடவடிக்கையும் இடம்பெறக் கூடாது என்றும் உத்தரவில் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# வெளியுறவு அமைச்சர் தஜிகிஸ்தான் சென்றார்




உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானில் சமாதான முன்னெடுப்புகளை எடுப்பதில் பிராந்திய நாடு களிடம் ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்காக கடந்த 2011 ஆண்டு நவம்பர் மாதம் துருக்கியில் "ஆசியாவின் இதயம்" என்ற பெயரில் ஆசிய நாடுகளின் வெளியுறவு மந்திரிகள் இடையே முதல் மாநாடு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் இந்த மாநாடு நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் 2021 ஆம் ஆண்டுக்கான ஆசியாவின் இதயம் மாநாடு தஜிகிஸ்தான் நாட்டின் தலைநகர் துன்பேவில் இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்வதற்காக மத்திய வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர் நேற்று துன்பே சென்றார். இந்த மாநாட்டில் 50 நாடுகளின் வெளியுறவு மந்திரிகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

அந்த வகையில் பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி ஷா மஹ்மூத் குரேஷியும் இந்த மாநாட்டில் கலந்துகொள்கிறார்.

எனவே மாநாட்டின் இடையே ஜெய்சங்கர் மற்றும் ஷா மஹ்மூத் குரேஷி இடையிலான சந்திப்பு நடைபெறலாம் என்ற யூகங்கள் எழுந்துள்ளன.

ஆனாலும் அப்படி ஒரு சந்திப்புக்கு திட்டமிடவில்லை என ஷா மஹ்மூத் குரேஷி தெரிவித்துள்ளார்.

# வாக்குறுதிப் பத்திரம் எழுதிக் கொடுத்து வாக்கு சேகரித்த மக்கள் நீதி மய்ய வேட்பாளர்!



காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையத்தில் மக்கள் நீதி மய்யத்தின் வேட்பாளர் பா.கோபிநாத், தான் சொன்ன கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகக் கூறி வாக்குறுதிப் பத்திரம் எழுதிக் கொடுத்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

காஞ்சிபுரம் சட்டப் பேரவைத் தொகுதியில் மக்கள் நீதி மய்யத்தின் சார்பில் பா.கோபிநாத் வேட்பாளராக போட்டியிடுகிறார். காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம் பகுதியில் வசிக்கும் நெசவாளர்களுக்குரிய குறைகளை கேட்டுக் கொண்ட அவர், பின்னர் தான் வெற்றி பெற்றால் செயல்படுத்தப்படவுள்ள விடயங்கள் குறித்து பொதுமக்கள் முன்னிலையில் தெளிவுபடுத்தி, 20 ரூபா உறுதிமொழிப் பத்திரத்தில் எழுதி பொதுமக்கள் முன்னிலையில் கையெழுத்திட்டார்.

இரு பத்திரங்களை எழுதிக் கையெழுத்திட்டு ஒன்றைத் தான் வைத்துக் கொண்டு மற்றொன்றை அப்பகுதியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவரிடம் கொடுத்தார். வேட்பாளர் ஒருவர் தான் வெற்றி பெற்றால் செய்யப்போகும் செயல்களை வாக்குறுதிப் பத்திரமாக எழுதிக் கொடுத்தது அப்பகுதி பொதுமக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளார்.

# அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியை ஆதரித்து இன்று தாராபுரத்தில் பிரதமர் மோடி பிரசாரம்



தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் அடுத்து பிரதமர் மோடி புதுச்சேரி மற்றும் தமிழகத்தில் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதாக தெரிவித்தார்.

சட்டப்பேரவை தேர்தல் பிரசாரத்திற்காக தாராபுரம் வந்தடைந்தபிரதமர் மோடி அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் மேற்கொண்டார். இதையடுத்து, பிரதமர் மோடி, இன்று மாலை புதுச்சேரியில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# 90 சதவீத பெரியவர்கள் தடுப்பூசி போட தகுதியானவர்கள் என அறிவிப்பதில் பெருமிதம் அடைகிறேன் - ஜோ பைடன்

அமெரிக்க அதிபராக பதவியேற்ற ஜோ பைடன், முதல் 100 நாள்களில் 10 கோடி அமெரிக்கர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை அறிவித்தார். அதற்கான பணிகளையும் செயல்படுத்தி வருகிறார்.

அமெரிக்காவில் பைஸர், மாடர்னா மற்றும் ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனம் தயாரித்துள்ள தடுப்பூசி என 3 நிறுவனங்களின் தடுப்பூசி மக்களுக்கு செலுத்தப்பட்டு வருகிறது.

அமெரிக்கர்கள் அனைவருக்கும் மே மாத இறுதிக்குள் தடுப்பூசி செலுத்தப்படும் என அதிபர் ஜோ பைடன் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், அதிபர் ஜோ பைடன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

இன்று முதல் 3 வாரங்கள் வரை 90 சதவீதம் பெரியவர்கள் தடுப்பூசி போட தகுதியுடையவர்கள் என அறிவிப்பதில் பெருமிதம் அடைகிறேன்.

அமெரிக்காவில் கொரோனாத் தொற்று அதிகரிக்கும்சூழல் உள்ளதால் ஏப்ரல் 19 ஆம் திகதிக்குள் அமெரிக்காவில் உள்ள அனைத்து பெரியவர்களில் 90% பேர் கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கு தகுதி பெறுவார்கள் என தெரிவித்தார்.



# இந்தோனேசியாவில் தீ விபத்து



இந்தோனேஷியாவில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட பெரும் தீ காரணமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

மேற்கு ஜாவா மாகாணத்தில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதன் காரணமாக விண்ணை முட்டும் அளவிற்கு நெருப்பும், புகையும் வெளியாகின.

இந்த தீ விபத்தில் சிக்கி 5 பேர் படுகாயமடைந்துள்ளதாக அம்மாகாண அரசு தெரிவித்துள்ளது.

மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அப்பகுதியிலிருந்து வெளியேற்றப் பட்டுள்ளனர்.

# கொரோனாத் தடுப்பூசி தட்டுப்பாடு; பிரேஸில் அமைச்சர் இராஜினாமா?



பிரேசிலில் கொரோனா பாதிப்பு அதிக அளவில் காணப்படுகிறது. உலக அளவில் கொரோனா அதிகம் பாதித்த நாடுகள் பட்டியலில் அந்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த தடுப்பூசியும் பிரேசிலில் போடப்பட்டு வருகிறது.

இதற்கிடையே, பிரேசிலுக்கு தடுப்பூசிகளைப் பெறுவதில் வெளியுறவுத்துறை அமைச்சர் எர்னஸ்டோ அராஜோ இராஜாங்க முறையில் தோல்வி அடைந்து விட்டதாக விமர்சனங்கள் எழுந்தன.

வெளியுறவுத்துறை அமைச்சர் எர்னஸ்டோ அரோஜோ, அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்டு ட்ரம்புடன் நெருக்கமான நட்புறவு மற்றும் சீனாவுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைத்தது ஆகிய காரணங்களால் பிரேஸில் போதிய அளவு தடுப்பூசிகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு இருப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், தன் மீதான விமர்சனங்களுக்கு பொறுப்பேற்று பிரேஸில் வெளியுறவுத்துறை அமைச்சர் பொறுப்பை எர்னஸ்டோ அரோஜா இராஜினாமா செய்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளது. ஆனால், இராஜினாமா குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளிவரவில்லை.

# ஆஸ்திரேலியாவில் அழகிய வண்ணதில் புதிய வகை சிலந்தி கண்டுபிடிப்பு..!



ஆஸ்திரேலியாவில் அழகிய வண்ணம் கொண்ட புதிய வகை சிலந்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சதுப்பு நிலப் பகுதியில் கண்டறியப்பட்டுள்ள மராட்டஸ் நெமோ என அழைக்கப்படும் இந்த சிலந்தி 4 மில்லி மீற்றர் மட்டுமே நீளம் கொண்டது. மயில் சிலந்தி வகையைச் சேர்ந்த நெமோ, நடனங்கள் ஆடுவதில் தனித்துவம் பெற்றவை என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரேஞ்சு நிற முகவமைப்புடன் வெள்ளைக் கோடுகளுடன் காண்பதற்கு கோமாளியைப் போல இருப்பதால் இந்தச் சிலந்திக்கு நெமோ என பெயரிட்டுள்ளதாக இதனைக் கண்டுபிடித்த இளைஞர் குறிப்பிட்டுள்ளார்.

# மொசாம்பிக் நாட்டில் 50 வெளிநாட்டினர் தலை துண்டித்துக் கொலை



மொசாம்பிக் நாட்டில் வெளிநாட்டவர்கள் மீது ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு கொலை வெறித் தாக்குதல் நடத்தி உள்ளது. சுமார் 50 பேர்களின் தலையை வெட்டி கொலை செய்துள்ளதாக தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் 17 வாகனங்களில், வெளியேறிய நிலையில், அவர்கள் மீது ஐ.எஸ். அமைப்பு சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது. இதனையடுத்து பலரை பிணைக்கைதிகளாக பிடித்து வைத்து தற்போது அவர்களை கொடூரமாக கொலைசெய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

53,000 பேர்கள் குடியிருக்கும் சுரங்க நகரமான பால்மாவை சுமார் 100 ஐ.எஸ் பயங்கரவாதிகள் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக கூறப்படுகிறது. ஆபிரிக்காவின் மிகப்பெரிய இயற்கை எரிவாயு சேகரிக்கும் பகுதியாக பால்மா அறியப்படுகிறது. இப்பகுதியில் இருந்து சுமார் 1,400 பேர் படகு மூலம் மீட்கப்பட்டதாக கூறப்படுகிறது. இருப்பினும், தெருவில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் பலரது உடல்கள் காணப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மியன்மார் எல்லைத் தாண்டி வருவோருக்கு அகதிகள் முகாம்கள் அமைக்கக் கூடாது

## மணிப்பூர் அரசு உத்தரவு

மியன்மார் எல்லையைத் தாண்டி வருவோருக்கு அகதிகள் முகாமை அமைக்க வேண்டாம் என்று மணிப்பூர் அரசு உத்தரவிட்டுள்ளது. தேவையானால் காயம் அடைந் தவர்களுக்கு மருத்துவ உதவிகள் செய்யலாம் என்றும் அதிகாரிகளுக்கு மணிப்பூர் அரசு உத்தரவிட்டுள்ளது. உணவும் அடைக்கலமும் நாடிவரும் அகதிகளை கனிவாகப் பேசி திருப்பி அனுப்பும்படியும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த அரசு நிர்வாகமும் தொண்டு நிறுவனமும் அங்கு அகதிகளுக்கான முகாமை அமைக்கக் கூடாது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அரசின் நிலைப்பாடு இதுவாக இருப்பினும் மனிதாபிமான அடிப்படையில் அகதிகளாய் வருவோருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்

# விலங்கு மூலமே மனிதருக்கு கொரோனா பரவியது; ஊகான் ஆய்வுக்கூடத்திலிருந்து பரவவில்லையாம்

வௌவ்வாலில் இருந்து விலங்கு மூலமாக மனிதர்களுக்கு கொரோனா பரவியதாக உலக சுகாதார அமைப்பின் ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

சீனாவில் ஊகான் மாகாணத்தில் ஆய்வுக் கூடத்தில் நிகழ்ந்த தவறால் கொரோனா வைரஸ் பரவியதாக கூறப்பட்ட நிலையில் ஆய்வுக்கூடத்தில் இருந்து கொரோனா பரவவில்லை என்று கூறப்படுகிறது.

சீனாவில் நிபுணர் குழு நடத்திய ஆய்வு தொடர்பான அறிக்கை உலக சுகாதார அமைப்புக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. அதன் விவரம் அதிகாரப் பூர்வமாக வெளியிடப்படாவிட்டாலும் சில பகுதிகள் அதிகாரிகள் மூலமாக கசிந்துள்ளன.


கொரோனா பரவலுக்கு நான்கு முக்கியக் காரணங்கள் கூறப்பட்டுள்ளன. வௌவ்வாலில் இருந்து மற்ற விலங்குகளுக்குப் பரவி மனிதர்களுக்குப் பரவியதாக அதில் கூறப்பட்டுள்ளது. மற்ற மூன்று வழிகள் சாத்தியமானவை இல்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சூயஸ் கால்வாய் இயல்பு நிலை

# எவர் கிவன் கப்பலைத் தாண்டிச் சென்ற 113 கப்பல்கள்

சூயஸ் கால்வாயை அடைத்துக் கொண்டிருந்த பிரம்மாண்ட கன்டெய்னர் கப்பலான எவர் கிவன் அங்கிருந்து அகன்ற பின் அங்கு வழக்கமான கப்பல் போக்குவரத்து தொடங்கியது.

இரு மார்க்கத்திலும் இன்று காலை சூயஸ் கால்வாய் வழியாக 113 கப்பல்கள் கடந்து சென்றன. கடந்த ஒரு வாரகாலமாக போக வழியின்றி சிக்கி நின்ற 422 கப்பல்களும் 3 அல்லது 4 நாள்களில் சூயஸ் கால்வாயை கடந்து செல்லும் என சூயஸ் கால்வாய் ஆணையத்தின் தலைவர் ஒசாமா ராபி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழித்துவிட ராஜபக்ஷக்களின் அரசாங்கம் முன்முனைப்பு

## கலையரசன் கவலை



அம்பாறை,மார்ச் 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற முன்முனைப்பினை இந்த அரசாங்கம் ஏன் எடுக்கின்றது என்பதை மக்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என, நேற்று திருக்கோவிலில் இடம்பெற்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கலந்துரையாடலில்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை இல்லாமல் செய்துவிட்டால் அவர்களுடைய நிகழ்ச்சி நிரலைத் தமிழ்ப் பிரதேசங்களிலே செவ்வனே செய்து முடித்து விடலாம் என்ற ஒரு எண்ணப்பாட்டை அரசாங்கம் வைத்திருக்கின்றது எமது வடக்கு கிழக்கிலே அம்பாறை மாவட்டம் மிகவும் முக்கியமானது. ஏனெனில் இலங்கையில்இனக்கலவரம்என்றஒன்றுஆரம்பிக்கப்பட்டதே இங்கிருந்துதான்.

நாம் இங்கு மூன்றாம் தரப் பிரஜைகளாக ஆக்கப்பட்டமையால் தொடர்ச்சியாகப் பிரச்சினைகளை முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்த அடிப்படையில் இங்கு எமது கட்சியைப் பலப்படுத்த வேண்டியது காலத்தின் கடப்பாடாகும்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் மிகத் தீவிரமாக இருந்தால் நாம் எமது கட்சியை முன்னேற்றப்பாதைக்குக் கொண்டு போக முடியும். எல்லாவற்றிற்கும் கட்சித் தலைமைகள் தான் வர வேண்டும் என்று இல்லை. எமது கட்சியை வளர்க்க வேண்டுமாக இருந்தால் எமது அடிமட்டத்தில் இருக்கும் அரசியல்வாதிகள் மிகவும் தெளிவாகச் செயற்பட வேண்டும்.

இந்த மாவட்டத்தில் எமது மக்கள் ஏனைய மாவட்டத்து மக்களை விட அந்நிய சமூகத்தால் துன்புறுத்தப் பட்டும், இழப்புகளைச் சந்தித்த மக்களாகவும் இருந்திருக்கிறார்கள். ஆனால் எமது மக்கள் தற்போது தடம் மாறிய செயற்பாடுகளே இடம்பெறுகின்றன. இந்த மாவட்டத்தில் எமது மக்களுக்குப் பல ஆசைவார்த்தைகளைக் கூறியவர் தற்போது எங்கே என்ற கேள்வியை மக்களே கேட்க வேண்டும். அவ்வாறானதொரு நிலைமையில் கட்சியை மாத்திரம் நாங்கள் குறை சொல்ல முடியாது.

எமது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் அவர்களால் இங்கு எத்தனையோ பாரிய அபிவிருத்திகள் இடம் பெற்றுள்ளன. இல்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது. தற்போதுள்ள இளைஞர்கள்தொழில்வாய்ப்புஎன்கின்றஒருமாயைக்குள்ளே சிக்குண்டு தவிக்கின்றார்கள்.

ஆனால் அவ்வாறான வாக்குறுதிகள் கொடுத்தும் வழங்கப்பட்ட ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களுக்கு எவ்வித வேலைவாய்ப்புகளும் வழங்கப்படவில்லை. இவ்வாறாக தமிழர்கள் ஏமாற்றப்படுபவர்களாகவே இருந்து கொண்டிருக்கின்றார்கள். இதனை நாங்கள் ஒவ்வொருவரின் வீடு வீடாகச் சென்று சொல்ல முடியாது. இதனை மக்களே நன்கு ஆய்வு செய்ய வேண்டும்.

தமிழரசுக் கட்சியை அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற முன்முனைப்பினை இந்த அரசாங்கம் ஏன் எடுக்கின்றது என்பதை மக்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். அவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை இல்லாமல் செய்துவிட்டால் அவர்களுடைய நிகழ்ச்சி நிரலைத் தமிழ்ப் பிரதேசங்களிலே செவ்வனே செய்து முடித்து விடலாம் என்ற ஒரு எண்ணப்பாட்டை வைத்திருக்கின்றார்கள். அதற்காகத் தான் அனைவரும் எங்கள் மீது பழி போடுகின்ற ஒரு நிலைமை இருக்கின்றது.

திருக்கோவிலில் இடம்பெறும் இல்மனைட் அகழ்வு பிரச்சினை சம்பந்தமாக இம்மாதம் 23ம் திகதி அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது அவ்வாறு ஏதும் அனுமதி கொடுக்கவில்லை என்று தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் திருக்கோவில் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயும் அதனை நிறுத்துவதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் தற்போதும் அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே இந்த அரசாங்கம் தமிழர்களுக்கு எதையும் செய்து தரமாட்டார்கள். என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இதனை எமது இளைஞர்களும் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

# கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் மின் துண்டிப்பு இடம்பெறும் இடங்கள்

*கல்முனை,மார்ச் 30*

*கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் அவசர திருத்த வேலை காரணமாக மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.*

*நாளை மறுதினம் வியாழக்கிழமை (01) கல்முனை, சாய்ந்தமருது ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக் குட்பட்ட 12ஆம் கொலனி, காரைதீவு, நந்தவன்சபிள்ளையார் கோவில் வீதி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடை அமுலில் இருக்குமென அறிவிக்கப் பட்டுள்ளது.*

*சனிக்கிழமை (03) கல்முனை, சாய்ந்தமருது ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட தரவைக்கோவில், கடற்கரைப்பள்ளி, அம்மன்கோவில், பீச் வீதி, இஸ்லாமாவாத் வீட்டுத்திட்டம், உடையார் வீதி, வீவீ வீதி, சாய்ந்தமருது பொலிவேரியன், கல்முனைக்குடி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும், மின் தடைப் படும்.*

*திங்கட்கிழமை (05) நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட நிந்தவூர், வெளவாலோடை ஆகிய பகுதிகளிலும் செவ்வாய்க்கிழமை (06) நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத் துக்குட்பட்ட ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை கிராம பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும், மின் தடைப்படும்.*

*புதன்கிழமை (07) சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்துக் குட்பட்ட ஹிஜ்ரா புரம், செந்நெல் புரம் ஆகிய பகுதிகளிலும் வியாழக்கிழமை (08) சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட மல்கம்பிட்டி, நைனாகாடு ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணிவரையும், மின் தடைப் படும்.*

*சனிக்கிழமை (10) நிந்தவூர், சாய்ந்தமருது ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட அட்டாளைச் சேனை ஜீ.ரீ.சி வீதி, அல்ஹிலால் வீதி, முந்தியடி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும், மின் தடைப்படுமெனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.*

# மயானப்பகுதியில் புத்தர் சிலை மக்கள் எதிர்ப்பினால் நிறுத்தம்



சங்கமண்கண்டி,மார்ச் 30

தாண்டையடி பிரதேசத்திலுள்ள சங்கமண்கண்டிக் கிராம மயானப்பகுதியில் புத்தர் சிலை அமைக்க நேற்று எடுத்த முயற்சி மக்கள் எதிர்ப்பினால் நிறுத்தப்பட்டுள்ளது.

அங்கு வந்த பௌத்தபிக்கு தலைமையிலான குழுவினருக்கு பொதுமக்கள் ஒன்று சேர்ந்து கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததையடுத்து அவர்கள் பின்வாங்கினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொத்துவில் பிரதேச சபைஉறுப்பினர்த.சுபோதரன் மக்களுடன் சமூகமளித்து, அங்குவந்த பிக்குமாரிடம் நியாயத்தை எடுத்துரைத்ததும் அவர்கள் ஏற்றுக்கொண்டு பின்வாங்கினர்.

இதுதொடர்பில் உறுப்பினர் சுபோதரன் தெரிவிக்கையில், பொத்துவில், முகுதுமகா விகாரை பௌத்தபிக்கு தலைமையிலான குழுவினர் எமது மயானப்பகுதியில் புத்தர் சிலை அமைப்பதற்காக கொங்கிறீட் தூண் முதலான பொருள்களுடன் வந்திறங்கினர். இந்த விடயம் மக்களுக்குத் தெரியவரவே, அங்கு மக்கள் ஒன்று கூடியமையால் நிலைமை பதற்றத்துக்குள்ளானது.

நானும் அங்குசென்று, அவர்களிடம் இது எமது பிரதேச மயானம். இதற்குள் புத்தர் சிலை அமைப்பதை எமது மக்கள் விரும்பவில்லை. எனவே, முயற்சியை கைவிடுங்கள் என்றேன்.

பதிலுக்கு பிக்குமார், இது வன இலாகா கட்டைபோட்ட பகுதி தானே நாங்கள் சிலை வைப்பதில் உங்களுக்கு என்ன பிரச்சினை என்று வாதம் புரிந்தார்கள். மக்களின் காணிகளை வன இலாகா கட்டை போட்டு வைத்துள்ளது. அதை விட இது மக்கள் வாழும்பகுதி. அவர்கள் இங்கு புத்தர் சிலை வருவதை விரும்பவில்லை. எனவே,இங்குபிரச்சினையை எழுப்ப வேண்டாம் என்றேன்.

அவர்கள் எனது வாதத்தை ஏற்றுக்கொண்டு, கொண்டு வந்த பொருள்களுடன் கிளம்பினர். இத்துடன் பிரச்சினை தீர்ந்தது என்றார்.

# மண்டூர் பிரதேசத்தில் மாணவி தற்கொலை

மண்டூர்,மார்ச் 30

அண்மையில் கா.பொ.த.(சா.த) பரீட்சை எழுதி விட்டு பெறுபேற்றுக்கு காத்திருந்த மாணவி ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காக்காச்சிவட்டை மண்டூர் பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய மாணவி சிவகுமார் - கேமலா என்பவர் நேற்று மாலை தனது வீட்டில் யாரும் இல்லாதநிலையில்வீட்டின்அறையினுள் தற்கொலை செய்ய முயற்சித்த நிலையில் அயலவர்களின் உதவியுடன் மீட்டு களுவாஞ்சிகுடி ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி சுற்றுலா பதில் நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனையின் பின்னர் பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துரையாடல்



அம்பாறை, மார்ச் 30

இலங்கை தமிழரசு கட்சியின் கல்முனை தொகுதி பிரதேசத்திற்கான பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் பிரதானிகளுடன் நேற்று இரவு அம்பாறை நற்பிட்டிமுனை பகுதியில் எதிர்கால போக்குகள் கட்சியின் திட்டங்கள் குறித்து கலந்துரையாடல் இடம்பெற்றது.

தமிழரசு கட்சியின் கல்முனை தொகுதி செயற்பாட்டாளரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது .

இதன்போது கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் தொடர்பான முன்நகர்வுகள், மாவட்ட ரீதியில் கட்சி எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சமகால அரசியல் நிலைமைகள் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் சரிவிலிருந்து மீண்டது மேற்கிந்தியத்தீவுகள்

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் போட்டி சமநிலையில் நிறைவடைந்துள்ள நிலையில் இந்தப் போட்டியின் முடிவு தொடரின் வெற்றியாளரைத் தீர்மானிக்கவுள்ளது.

நோர்த் சவுன்டில் நடைபெறும் இந்தப் போட்டியின் முதல் நாள் ஆட்ட முடிவின்போது மேற்கிந்தியத் தீவுகள் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களைச் சேர்த்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மே.இ. தீவுகள் அணி 185 ஓட்டங்களுக்குள் முதல் 6 விக்கெட்டுக்களையும் இழந்து தடுமாறியது. அணித்தலைவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரருமான பிரத்வெய்ட்டும் கோர்ன்வாலும் எட்டாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்து முதல் நாளின் கடைசிப் பகுதியில் சிறப்பாக விளையாடினார்கள்.

நிதானமாக ஓட்டங்களைப் பெற்ற பிரத்வெய்ட் 99, அதிரடியாக விளையாடிய கோர்ன்வால் 43 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர். சுரங்க லக்மால் அபாரமாகப் பந்துவீசி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இரண்டாவது நாள் ஆட்டம் இன்று இலங்கை நேரப்படி மாலை 7.30க்கு ஆரம்பமாகும்.

# ஹர்மன்ப்ரீத் கௌருக்கு கொரோனாத் தொற்று

இந்திய மகளிர் இருபதுக்கு இருபது அணித் தலைவி ஹர்மன்ப்ரீத் கௌர் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகியுள்ளார்.

அண்மையில் லக்னோவில் நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இவர் பங்கேற்றார். அடுத்து நடைபெற்ற இருபதுக்கு இருபது தொடரில் காயம் காரணமாக அவர் விளையாடவில்லை. இந்நிலையில், கடந்த நான்கு நாள்களாக லேசான காய்ச்சல் இருந்ததால் கொரோனா பரிசோதனையை இவர் மேற்கொண்டதில் கொரோனாத் தொற்று அவருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து வீட்டில் அவர் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் தொடர்ச்சியாக ஹர்மன்ப்ரீத் கௌருக்கும் ஏனைய வீராங்கனைகளுக்கும் கொரோனா பரிசோதனைகள் நடத்தப்பட்டன. அப்போது யாருக்கும் தொற்று அடையாளப்படுத்தப்படவில்லை. எனவே, கொரோனாப் பாதுகாப்பு வளையத்தை விட்டு வெளியேறிய பிறகே அவருக்கு தொற்று ஏற்பட்டிருக்கும் என அவரைப் பரிசோதித்த மருத்துவர்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.



# பஹ்ரைன் கிராண்ட் பிரிக்ஸ் லூயிஸ் ஹமில்டன் முதலிடம்

போஃர்முலா வன் கார்பந்தயத்தின் பஹ்ரைன் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில் தற்போதைய சம்பியனான மெர்சிடஸ் பென்ஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன் முதலிடம் பெற்றுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் 'போஃர்முலா வன்' கார் பந்தயம் 23 சுற்றுகளாக இடம்பெறுவது வழமை. ஒவ்வொரு சுற்றும் ஒவ்வொரு நாடுகளில் நடைபெறும்.

2021 இன் முதலாவது சுற்றான பஹ்ரைன் கிராண்ட் பிரிக்ஸ் 26 ஆம் திகதி முதல் 28 வரை நடைபெற்றது.

இதில் 308.238 கிலோ மீற்றர் பந்தயத் தூரம் கொண்ட போட்டியில் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள்




பங்கேற்றனர். இதில் தற்போதைய சம்பியனான மெர்சிடஸ் பென்ஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன், பந்தயத் தூரத்தை ஒரு மணித்தியாலம் 32 நிமிடங்கள் 3.897 விநாடிகளில் கடந்து முதலிடம் பெற்றார். இந்த வெற்றியின் மூலம் அவருக்கு 25 புள்ளிகள் கிடைத்துள்ளன.

அவரை விட 0.745 விநாடிகள் பின் தங்கிய நிலையில் பந்தயத் தூரத்தைக் கடந்த ரெட்புல் அணியின் வீரரான மக்ஸ் வெர்ஸ்டபென் இரண்டாவது இடத்தைப் பெற்றார். இரண்டாம் இடத்திற்கான 18 புள்ளிகள் அவருக்கு வழங்கப்பட்டன.

37.383 விநாடிகள் பின்தங்கிய நிலையில் பந்தய தூரத்தைக் கடந்த மற்றொரு மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான வால்ட்டெரி போடாஸ் மூன்றாவது இடத்தைப் பிடித்தார். அதற்கு அவருக்கு 16 புள்ளிகள் வழங்கப்பட்டன.


போஃர்முலா வன் தொடரின் அடுத்த சுற்றுப்போட்டி ஏப்ரல் 18ஆம் திகதி இத்தாலியில் நடைபெறவுள்ளது.

# மியாமி ஓபின் டென்னிஸ் கடுமையான போராட்டத்தில் மெத்வடேவ் வெற்றி

மியாமி ஓபின் டென்னிஸ் போட்டியில் ரஷ்யாவின் டானியல் மெத்வடேவ் காலிறுதிக்கு முந்தைய 4 ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவின் மியாமி நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில், ஆண்கள் ஒற்றையர் 3 ஆவது சுற்றில் உலகின் 2 ஆம் நிலை வீரரான டானியல் மெத்வடேவ், கடும் போராட்டத்துக்குப் பிறகு 7 - 6 (3), 6 - 7 (7), 6 - 4 என்ற செட் கணக்கில் உலகின் 86 ஆம் நிலை வீரரான அவுஸ்திரேலியாவின் அலெக்ஸி போபிரினை வீழ்த்தினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டிலேயே மெத்வடேவுக்கு கடும் சவால் அளித்தார் போபிரின். இதனால் முதல் செட்டே டைபிரேக்கர் வரை சென்றது. எனினும் கடுமையாகப் போராடிய மெத்வடேவ், அந்த செட்டை 7 - 6 (3) என்ற கணக்கில் கைப்பற்றினார். இதையடுத்து நடைபெற்ற 2 ஆவது செட்டில் ஒரு கட்டத்தில் டானியல் மெத்வடேவ் 5 - 2 என்ற கணக்கில் முன்னிலை பெற்றார். ஆனால், சரிவிலிருந்து மீண்ட போபிரின்கடும் சவாலைக் கொடுக்க, 2 ஆவது செட்டும் டைபிரேக்கருக்கு சென்றது. இதில் அபாரமாக ஆடிய போபிரின், அந்த செட்டை 7 - 6 (7) என்ற கணக்கில் கைப்பற்றினார்.



இதையடுத்து நடைபெற்ற வெற்றியைத் தீர்மானிக்கும் 3 ஆவது செட்டில் அபாரமாக ஆடிய மெத்வடேவ், அந்த செட்டை 6 - 4 என்ற கணக்கில் கைப்பற்றி வெற்றி கண்டார். இதன்மூலம் அவர் 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

எனது டென்னிஸ் வாழ்க்கையில் நான் பெற்ற தலைசிறந்த வெற்றிகளில் ஒன்றாக இந்த வெற்றி இருக்கலாம். ஏனெனில் கடுமையான தசைப்பிடிப்பால் நான் அவதிப்பட்டேன். வலியால் துவள ஆரம்பித்தேன். அத்தோடு எனது கால்கள் கட்டுப்பாட்டில் இல்லாமல் வேறு எங்கோ செல்வது போன்ற உணர்வு எனக்குள் ஏற்பட்டது. எனினும் நான் கீழே விழுந்தால், மீண்டும் எழ முடியாது என உணர்ந்தேன். அதனால் விடாப்பிடியாக போராடுவது என முடிவு செய்தேன் என்று போட்டியின் முடிவில் டானியல் மெத்வடேவ் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கவே கோட்டாவுக்கு ஆதரவு வழங்கினோம்

## புதுக்கதை விடுகிறார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மறுசீரமைப்பு செயற்திட்டத்தின் கீழ் மத்திய கொழும்பு ஆசனத்துக்கான கட்சி மத்தியகுழு நியமன நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது, அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில் –

மத்திய கொழும்பு ஆசனத்தில் மாத்திரமன்றி, நாடளாவிய ரீதியிலுள்ள சுதந்திரக்கட்சியின் அனைத்து ஆசனங்களும் முழுமையாக மறுசீரமைக்கப்பட்டு புதிய மத்தியகுழு நியமிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி, கட்சியை மேலும் வலுப்படுத்தி, நாட்டுமக்களின் ஆதரவைத் திரட்டிக்கொண்டு முன்நோக்கிப் பயணிப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவால் 1951ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஸ்தாபிக்கப்பட்டதுடன் அதன் பொதுச்செயலாளர்களாக சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய மூவினங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மூவர் நியமிக்கப்பட்டார்கள்.

அவரைத் தொடர்ந்து ஆட்சிப்பீடமேறிய சிறிமாவோ பண்டாரநாயக்கவும் நாட்டின் பொருளாதாரத்தில் பாரியதொரு புரட்சியை ஏற்படுத்தினார்.

அக்காலப்பகுதியில் முதலாளித்துவ நாடுகளுக்கும் சோசலிச நாடுகளுக்கும் இடையில் 'யார் அதிகாரத்தைக் கைப்பற்றுவது?' என்ற அதிகாரப்போட்டியொன்று காணப்பட்டது.

அதன்காரணமாகவே எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவால் அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு இயங்கக்கூடிய வகையிலான வெளிநாட்டுக்கொள்கை பேணப்பட்டது.

அதேபோன்று சிறிமாவோ பண்டாரநாயக்கவின் கொள்கைகள் ஊடாக அனைத்து சர்வதேச நாடுகளும் எமது நட்புநாடுகளாகத் திகழ்ந்தன.

அவரைத்தொடர்ந்து நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் போர் இடம்பெற்ற காலப்பகுதியில்கூட மிகவும் சிறந்த செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்.

அதன்பின்னர் மஹிந்த ராஜபக்ஷ போரை முடிவிற்குக்கொண்டுவந்து நாட்டினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் தலைவர் என்றவகையில் ஒருமித்த நாட்டை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

பண்டாரநாயக்க குடும்பம் நாட்டை ஆண்ட காலப்பகுதியிலேயே இலங்கை தொடர்பில் சர்வதேச சமூகம் பெருமளவில் அறிந்துகொண்டது.

மேலும் நான் ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலப்பகுதியில் எமது நாடு தொடர்பில் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்றுக்கொண்டேன்.

இந்நிலையில், எமது நாட்டின் பிரச்சினைகளுக்கு நாமே தீர்வுகாணும் நோக்கிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மேலும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காகவே நாம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குகின்றோம்.

அதுமாத்திரமன்றி, கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி உள்ளடங்கலாக நாட்டின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்திட்டங்களைத் தயாரிக்கும் பணிகளையும் கட்சியின் உபகுழுக்களிடம் கையளித்திருக்கின்றோம் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்

# வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் எரிந்த நிலையில் அம்பாறையில் மீட்பு



அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் வயோதிபப் பெண் ஒருவர் தனக்குத் தானே தீயிட்டு தற்கொலை செய்துகொண்டு தீயில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விநாயகபுரம் 3 பிரிவு காளிகோவில் வீதியைச் சேர்ந்த 76 வயதுடைய முத்துச்சாமி கருப்பாயி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த வயோதிபப் பெண் சம்பவ தினமான ஞாயிறு நள்ளிரவு 12 மணியளவில் வீட்டின் அறையில் இருந்து வெளியேறி வீட்டின் முற்றத்தில் தற்கொலை செய்ய தனக்குத் தானே மண்ணெண்ணெய்யை ஊற்றி தீவைத்ததையடுத்து அவர் தீயில் எரிந்த நிலையில், உறவினர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபோதும் குறித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த வயோதிப பெண்ணுக்கு சிறுநீரகம் இரண்டும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் பல்வேறு நோயால் வேதனைகளை அனுபவித்து அவர் வந்துள்ளார் எனவும் மனவிரக்தியின் காரணமாகவே அவர் தீயிட்டு தற்கொலை செய்துள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது .

உயிரிழந்தவரின் சடலம் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கைதான 64 பேருக்கும் மறியல் நீடிப்பு

உயிர்த்தஞாயிறுத்தாக்குதல்தொடர்பாகக் காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி, சியோன், தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட வெவ்வேறு 4 வழக்குகளைக் கொண்ட 64 பேரையும் எதிர்வரும் 12 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு காணொலி மூலம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.ஏ றிஸ்வான் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த 21.4.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் அம்பாந்தோட்டை மற்றும் நுவரேலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த 63 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் 58 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 58 பேருடன் குண்டுதாக்குதல் தொடர்பாக வெவ்வேறு 4 வழக்கு இலக்கங்களை கொண்ட சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், சியோன் தேவாலய தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட ஆசாத்தின் தாயார், சீயோன் தேவாலய தற்கொலை குண்டுதாரிக்கு பயணம் செய்ய பஸ்ஸில் ஆசனப் பதிவு செய்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 6 பேர் உட்பட 64 பேரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த வெவ்வேறு 4 வழக்கு இலக்கங்களைக் கொண்ட 69 பேரின் வழக்குகள் நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, பிணையில் விடுவிக்கப்பட்ட 5 பேரும் நீதிமன்றில் ஆஜராகிய நிலையில் ஏனைய 64 பேரும் வெவ்வேறு மாவட்டத்திலுள்ள சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் காரணமாக அழைத்து வரமுடியாத காரணத்தால் காணொலி மூலம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.ஏ றிஸ்வான் 64 பேரையும், எதிர்வரும் 12 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# வீட்டுத்திட்டம் பெற்ற குடும்பங்கள் இன்று கடனாளிகளாக உள்ளன

## செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் கடந்த அரசில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தால் பல்வேறு குடும்பங்கள் பலன் அடைந்தார்கள். ஆனால், வீட்டுத்திட்டத்தை பெற்ற பல குடும்பங்கள் இன்று கடன் காரர்களாகக் காணப்படுகின்றனர் எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுமார் 7 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகளுக்கு சுமார் ஒரு லட்சம் ரூபா முதல் 2 லட்சம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

புதிய வீடுகளை அமைப்பதற்காகத் தமது பழைய வீடுகளை அகற்றி வீடுகளை கட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

தமது உடைமைகளை அடகு வைத்தும், வங்கிகளில் கடனை பெற்றும் அதி கூடிய வட்டிக்கு பணத்தைப் பெற்றும் வீடுகளை கட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டே குறித்த வீட்டுத்திட்டம் அரசால் வழங்கப்பட்டது. ஆனால், தற்போது அந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் இடர்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போதைய அரசுகூட பாதிக்கப்பட்ட மக்களின் வீட்டுத்திட்டப் பிரச்சினையை நிவர்த்தி செய்ய அக்கறை காட்டவில்லை.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடந்த அரசாங்கத்தில் வழங்கியதன் காரணத்தாலேயே தற்போதைய அரசாங்கம் அக்கறை காட்டவில்லை எனத் தெரிகின்றது.

தற்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, குறித்த வீட்டுத்திட்டம் தொடர்பில் வாய் திறக்க கஷ்டப்படுகின்றார்.

பல்வேறு விடயங்களை அவர் நாடாளுமன்றத்தில் கதைத்தாலும்கூட வீட்டுத்திட்டப் பிரச்சினையில் அவர் வாய் மூடி மௌனம் காக்கின்றார். இந்த விடயத்திற்கு அவரும் குரல் கொடுக்கவேண்டும். – என்றார்.

# தடுப்பூசி வழங்கும் 2 ஆம் சுற்று ஏப்ரல் 19 ஆம் திகதி ஆரம்பம்!

இந்தியாவின் கொவிஷீல்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களுக்கு ஏப்ரல் 19 ஆம் திகதி முதல் இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

இதற்குத் தேவையான தடுப்பூசிகள் கைவசம் இருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

இரண்டாம் கட்டமாக தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் ஏப்ரல் 19 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

அதற்குத் தேவையான தடுப்பூசி தொகை கையிருப்பில் உள்ளன. உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனைக்கமைய 12 வாரங்களின் பின்னர் இரண்டாம் கட்டமாக தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் குறித்த காலவரையறைக்குள் இரண்டாம் கட்டமாக தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு வெகுவிரைவில் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்நிலையில் சீனாவில் தயாரிக்கப்படும் 60 லட்சம் சைனோஃபார்ம் கொவிட் தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கப் பெறவுள்ளன.

சைனோஃபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றவுடன் உரிய தரப்பினரை தேர்ந்தெடுத்து அவற்றை வழங்க எதிர்பார்த்துள்ளோம். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.03.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org